## ஏப்ரல் - 09 - தவக்கால ஆறாம் வாரம்

## குருத்தோலை ஞாயிறு – பரிசுத்த வாரம் ஆரம்பம்

**என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர்: என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர். திபா. 22:18**

### முதல் வாசகம் : ஏசாயா 50 : 4 – 7

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன்.

**பதில்பாடல் :** என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

### இரண்டாம் வாசகம்: பிலிப்பியர் 2: 6 – 11

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக் கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன் றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

**நற்செய்தி: மத்தேயு26 : 14 ---- 27 – 66 வரை வாசித்துத் தியானிக்கவும் (அல்லது குறுகிய வாசகம்) மத்தேயு27 :11 – 54வரை வாசித்துத் தியானிக்கவும்.**

**தியானம்:** தவக்காலத்தில் உள்ளார்ந்த மனிதனோடு பாலைநிலத்தில் நுழைந்து, பரிசுத்த வாரத்திற்குள் கால்பதிக்கும் நாம், இன்றைய நாளை ஆண்டவர் இயேசுவின் பாடுகளது ஞாயிறு என்றழைக்க நற்செய்தி சான்று தருகிறது. அன்னையாம் திருச்சபையின் வழிபாடுகளில் உச்சமெனப்படும் ஆண்டவர் இயேசுவின் இரா உணவுப் பெருவிழா" வின் திருவிருந்துப்பந்தியில் அமர்வதற்கு எந்தளவில் தகுதியுடையோம்?. யூதாஸ் போன்று "ஆண்டவரே அது நானோ?" (மத்தேயு 26:22) என எம்மை ஆராய, ஆண்டவர் இயேசுவின் பாடுகள், துன்பங்கள். மரணம் என்பவற்றைத் தியானிக்க, மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையேயுள்ள வேறுபாட்டை வேறுவிதமாக சிந்திக்கவும் நற்செய்தி தூண்டுகின்றது. மனிதன் பாவம் செய்தாலும் இரக்கமுள்ள இறைவன் தனது ஒரேமகன் வழியாக மீட்டெடுக்க விரும்பினார். இயேசு சாவுக்கு அஞ்சியதுமில்லை. எப்படிச் சாகலாம் எனத் தற்கொலை உணர்வுடன் வாழவுமில்லை. இயேசுவின் எருசலேம் பயணம் ஏதோ உற்சாகத்தில் புறப்பட்ட சுற்றுலாப் பயணமல்ல. உலகின் மீட்புக்காகத் தன்னையே கையளிக்கும் மறை உண்மையை உணராத நாங்களே, ஓசன்னாப் பாடி"....அவனைச் சிலுவையிலறையும்" (மத்தேயு 27:23) என்று உரக்கக் கத்தினோம். இன்றைய நாளில் எமது கரங்களில் ஏந்தப்படும் குருத்தோலைகள் யூதாசினதும் அவனது கூட்டத்தினரதும் சுயநலத்தைத் தேடும் வெளிப்பாடா? அல்லது தன்னையே வெறுமையாக்கி இடர்கள், துன்பங்கள் மத்தியில் சாவை ஏற்றுக்கொள்ளும் ஆண்டவர் இயேசுவின் நம்பிக்கையின் வெளிப்பாடா? எமது கரங்களில் ஏந்தப்பட்ட குருத்தோலைகள் எம்முன்னே நடக்கும் அநியாயங்களையும், அத்துமீறல்களையும், சுயநலத்தையும், தற்பெருமையையும், ஆடம்பரத்தையும், வீண்பகட்டையும், சாதியத்தின் பெயரால் கூறுபோடும் அநியாயங்களுக்கும் எதிராக உயர்த்தப்படட்டும். பரிசுத்த வாரத்தை ஆதாயமாக்குவோம். கிறிஸ்தவர்கள் என்ற முகமூடியை அணிந்து கொண்டு மனிதக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களிலிருந்து விலகுவோம். தவக்காலத்தின் மனமாற்றத்திற்கான பாவ அறிக்கை ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வோம். நாமும் துணிந்து "ஆண்டவரே அது நானோ" (மத்தேயு26:22) எனக்கேட்பது மட்டுமல்ல, திடமான நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் ஆண்டவர் இயேசுவை ஓசன்னாப் பாடி வரவேற்போம்.